

திருகோணமலையை பிறப்பிடமாகக் கொண்ட

# அமரர். திருமதி. பாலசிங்கம் புவனேஸ்வரி அவர்களின்

## 45ஆம் நாள் நினைவு மலர்

16.11.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபுர தீபம்



## கோணேசர் ஆலயம்

## திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பிற்கும் பாசத்திற்கும்
பாசநிழல் விரிவிற்கும்
நிகரற்ற பிறப்பான தாயே
உங்கள் வாழ்வும் இறப்பும்
நின்று நிழலாடும் எம் உயிர்ப்பும்
நலம் தந்து நல்வழிகாட்டி
சுகம் தந்து உறவு தந்தீர்
அறுவரைப் பெற்றெடுத்தே
நல் இதயம் கொண்ட தாயே
எல்லாம் இழந்தோம் பிரிவால்
நிலையிழந்து தவிக்கின்றோம்
மனமுருகியபடியே இறைநாடி
மனம் வாடி சமர்ப்பணம் செய்தோம்.

**************



இவ்வண்ணம்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
குடும்பத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்.

# திருமதி. புவனேஸ்வரி யாலசிங்கம்

மலர்வு
1948.10.18

உதிர்வு
2009.10.03

## திதி நிர்ணயம்

மலர்ந்த விரோதி வருட புரட்டாதித் திங்கள் மூன்றில்
நிறைந்த புரட்டாதி நட்சத்திர சதுத்தசித் திதிதனில்
இனிய நங்கை புவனேஸ்வரியாள் உற்றார் கலங்க
நற்பேறு கண்டார் சங்கரன் தன் காலடியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் திருமந்திரம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

எண்ணுகே னென்சொல்லி யெண்ணு கேளோ
எம்பெருமான் றிருவடியே யெண்ணி னல்லால்
கண்ணில்லேன் மற்றோர் களைகண் ணில்லேன்
கழலடியே கைதொழுது காணி னல்லலால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போதுணரமாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்
துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டுகொள்ளே.

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை யாண்டு கொண்டென்னுள்
இருட் பிழம்பற எறிந்தெழுந்த
சுடர் மணி விளக்கினுள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறியாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ்சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டெனும் பதங் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு
உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும்,
நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போது உன் அடியின்
கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல் பொரி
கப்பியகரிமுக னடிபேணிக்
கற்றிடுமடியவர் புத்தியி லுறைபவர்
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொருதிரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி குதல்வனை
மட்டவிழ் மலர் கொடு பணிவேனே
முத்தமிழ் மடைவினை முற்படுகிரிதனில்
முற்பட எழுதிய முதல் வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவனுறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துயரதுகொடு சுப்பிரமணிபடும்
அப்புனமதனிடை யிபமாகி
அக்குறமகளுடனச் சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர்சஷ்டி கவசம்



துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம்! நெஞ்சிற் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும் நிஷ்டையும் கைகூடும் நிமலரருள் கந்த சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

**அமரரிடர் தீர அமரம் புரிந்த**
**குமரனடி நெஞ்சே குறி**

### நூல்
### நிலைமண்டில ஆசிரியப்பா

**சஷ்டியை நோக்க சரவண பவனார்**
**சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்**
**பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை**
**கீதம் பாடக் கிண்கினி ஆட**
**மைய நடஞ்செயும் மயில்வா கனனார்**
**கையில்வே லால் எனைக் காக்கவென் றுவந்து**
**வரவர வேலா யுதனார் வருக!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக வருக மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக!
வாசவன் மருகா வருக வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறு முகம்படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ!.
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதிஎன் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க!
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க!
பன்னிரு விழியால் பாலனைக் காக்க!
அடியேன் வதனம் அழகுவேல் காக்க!
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க!
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிசெவி இரண்டும் வேலவர் காக்க!
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க!
பேசிய வாய்தன்னைப் பெருவேல் காக்க!
முப்பத் திருபல் முனைவேல் காக்க!
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க!
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க!
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க!
மார்பை இரத்தின வடிவேல் காக்க!
சேரிள முலைமார் திருவேல் காக்க!
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க!
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க!
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க!
பழுபதி னாறும் பருவேல் காக்க!
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க!
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க!
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க!
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க!
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க!
வட்டக் குதத்தை வடிவேல் காக்க!
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க!
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க!
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க!
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க!
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க!
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க!
முப்பால் நாடியை முனைவேல் காக்க!
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க!
அடியேன் வதனம் அசைவுள நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுகவே வந்து கனகவேல் காக்க!
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க!
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க!
ஏமத்தில் ஜாமத்தில் எதிர்வேல் காக்க!
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க!
காக்க காக்க கனகவேல் காக்க!
நோக்க நோக்க நொடியில் நோக்க!
தாக்க தாக்க தடையறத் தாக்க!
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தன்எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு!
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் நன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடாந் தோடப்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடுந்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்
சூலை சயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பீரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவம்ஒளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியை
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பாலகு மாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யான்உனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவிநன் பூதியை
நேசமு டன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்!
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன்என் மீதுன் மனமகிழ்ந் தருளி
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேசமு டன்ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுஉருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன்எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழுவர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேளே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே!
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்!
சரணம் சரணம் சரவண பவஓம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர். புவனேஸ்வரி பாலசிங்கம்
## அவர்களின்
## வாழ்க்கைச் சரிதம்

குரைகடலோதமாய் நித்திலம் சிறக்கும்
மானினம் துள்ளும் திருமலை நகரிலே
செல்வம் நிறைந்த குடும்ப மரபிலே
ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தெட்டில்
யாழ்ப்பாணம் கம்புர் மலையைச் சேர்ந்த
இராமுப்பிள்ளைக்கும் சின்னப்பிள்ளைக்கும்
இளைய மகளாய் புவனேஸ்வரி வந்துதித்தார்
ராஜரெட்ணம் யோகராஜா உடன் தங்கரெட்ணம்
நல் வில்வராஜா விஜயரெட்ணம் ஈறாய் கனகரெட்ணமுமாய்
ஊர்போற்ற சகோதரங்களாய் வந்து பிறந்தார்
பெற்றோர் சொல்லை மதித்தே தினம்
பெருமையோடு நாளும் வாழ்ந்து வந்தார்
மழலை மொழிபேசி புழுகு தமிழ் பயிலும் வேளை
பெற்றோரும் மற்றோரும் அகமகிழ்ந்தே
பள்ளிவளை தேடி ஸ்ரீ சண்முக மகளிர் கல்லூரியிலே
பயிலவைக்க எண்ணியே பாங்குடனே சேர்த்துவைத்தார்
பதினொராம் தரம் வரையில் சிறப்புடனே கல்விகற்றே
ஆய கலைகள் பலவும் கற்றே எந்நாளும்
நற்பெண்ணாக வளர்ந்து வந்தார்
பருவம் கண்டே வளர்வது கண்டு
தந்தையும் தாயும் அகமகிழ்ந்திருந்த போதில்
ஊனமையில்லா ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தெட்டிலே
எண்ணப்படியே வாழ்வைத் தேடியே
பாலசிங்கத்தை கணவனாக்கியே சிறப்புக் கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சொந்த வாழ்விலே மகிழ்ச்சி கண்டே
மூத்தமகனாய் பிரேமச்சந்திரனையும்
பாலச்சந்திரன் உடன் ஜெயச்சந்திரனுமாய்
இராமச்சந்திரன் செல்வமகள் பாலசாந்தி
கடைக்குட்டியாய் இராஜவதனியையும்
அன்பாய் பண்பாய் ஈன்றெடுத்தார்
செல்வக் குழந்தைகளை குறைகள் இன்றியே
பெற்றோர் மற்றோர் துணையோடே
தேசம் புகழ வளர்த்தெடுத்தார்.
மக்களை உயர்த்த எண்ணிபடியே
கல்விதேடியே பள்ளியில் சேர்த்தார்
குழந்தைகள் நிறைவாய் வளர்ந்திட்ட வேளை
நாட்டின் சூழல் இறுகிவரக்கண்டே
குழந்தைகளைக் காக்கப் பிரயத்தனம் செய்தார்
பிரேமச்சந்திரன் இறந்ததை அறிந்தே
உள்ளம் உருகி உருக்குலைந்து போனார்
காலத்தை நொந்தெ வாழ்ந்திடும் வேளை
ஜெயச்சந்திரன் உடன் இராமச்சந்திரன் ஈறாய்
வரிசை வரிசையாய் மடிந்து போயினர்
தனிமரமாகி வேதனை சுமந்தார்.
இறைவனை நொந்தபடியே தினம் தினம் வாழ்ந்தார்
பாலசாந்தியை ரமேஷிற்கு மணம் செய்தும்
இராஜவதனியை தாஸனின் கரம் சேர்த்தும்
நிம்மதியாக வாழ்ந்து வந்தார்
பாலச்சந்திரனோடே இறுதிவரை வாழ்ந்தே
நேசம் கொண்டு அகமகிழ்ந்திரந்த போதில்
குறுகிய காலத்தில் சகோதரர்கள் மறைந்து போக
துன்பம் தாளாது துவண்டு போனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடியோடியே உதவிகள் செய்தே
உற்ற பொழுதும் ஓய்ந்திருக்காமலே
உற்றாரைப்போற்றி உறவினைப் போற்றினார்
யாழ்மகள் தன்னைப் பார்க்க எண்ணியே
கப்பல் ஏறி யாழ்நகர் சென்றார்
மகளைப் பார்த்து உறவுகள் காத்து
ஒருவாரகாலமும் கடந்து செல்லமுன்னமே
நோயினால் துடித்தே பெரியாஸ்பத்திரி கண்டார்
பாலனை நினைத்தே வேதனை கண்டார்
உறவுகள் கலங்க உற்றார் மயங்க
உறவினைப் பிரிந்தே துயில்வது போல இறந்துபோனார்
திருமலைதேடிச் செய்தி வந்த போதும்
உறவுகள் காணா இறுதிப்பயணத்திற்காய்
பாலச்சந்திரன் கதறித்துடிக்க
யாழ்நகர் மண்ணிலே சங்கமமானார்
தென்றல் வீச மறந்து போனது போலவும்
ஓடிய நதியானது நின்றது போலவும்
அடங்கியபடியே சங்கரனிடம் சரணடைந்தார்

கவிதையாக்கம்
கவிஞர். யோகானந்தன்
திருகோணமலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிந்து போன மாயமென்ன

ஒன்றாய்ப் பிறந்து நின்றோம்
ஆசைகாட்டி அரவணைத்தோம்
அடுக்கடுக்காய் சகோதரர்கள்
மறைந்து போனதை எண்ணியே
வாடி நின்ற எங்களுக்கு
சகோதரியே நீ பிரிந்த மாயமென்ன
இறுதிவரை உன்னுடலை காணமுடியாதபடி
யாழ்மண்தேடி விரைந்து சென்றாயே
பிஞ்சிப் பருவமதில் நாங்கள் ஒன்றாய்
பெற்றோர் அரவணைப்பில் பிரியாதிருந்தோம்
பெரியவர்களாகி பிரிந்து செல்லுகின்றோம்
சகோதரியே உன்மக்களை எப்பொழுதும்
எம்மக்களாய் கண்ணில் வைத்து நிற்போம்
மீண்டும் பிறப்பெடுத்து வாழும்வரையும்
கண்ணீரோடு காத்திருப்போம்.



அன்புச் சகோதரர்கள்
திருமதி. தங்கரெட்ணம்
திரு. விஜயரெட்ணம்
திரு. கனகரெட்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாத துயரெனக்கு !

பல்லாண்டு காலமாய் சேர்ந்திருந்தே
வாழ்வின் ஏற்ற இறக்கங்களை (க்)
கண்டு நிதம் வாழ்ந்தோம்
என் உறவுகளை தேடிச் சென்று
உரிமையோடு பழகிவந்தாயே
பிள்ளையின் பாசம் இழுத்துவர
யாழ்மண்தெடி விரைந்து வந்தாயே
வந்த செய்தி அறிய முன்னே
மறைந்து போன மாயமென்ன
உறவுகளைக் கலங்க வைத்தே
விண்ணகம் தேடி மறைந்தனையோ
பிறப்பொன்று மீண்டும் இருக்குமானால்
மீண்டும் வந்து என்னோடு சேர்ந்திருப்பாய்

கணவர்
பாலசிங்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியவில்லை அம்மா.....

அடுக்கடுக்காய் அன்புச் சகோதரர்களை
பறிகொடுத்து நின்றே பரிதவித்தேன்
நீங்கள் என்னருகே இருப்பதை நினைத்தே
மனம் தேறி என் பணி செய்தேன்
என்ன கொடுமை அம்மா
கண்மூடி இமைக்க முன்பே
கதை முடிந்து போனதென்ன
யாழ்ப்பாணம் சென்று தங்கைக்குதவ
போய்விட்டு விரைந்து வருவதாக
வாக்குத்தந்து கப்பலேறி சென்ற நீங்கள்
உறவுகளை பரிதவிக்க வைத்ததேனோ
ஆறாது தாயே அழுதாலும் தீராதே
மரணச் செய்தி வந்து சேர்ந்தவுடன்
மனம் சோர்ந்து கப்பலில் வந்தேன்
மெய்யுடலைத் தேடியபடியே
மெய்சோர்ந்து கைசோர்ந்தேன்
மாதம் பல கடந்து ஆண்டு பல சென்றாலும்
மாறாது மாறாது என்றும் உன் பிரிவு




அன்பு மகன்
பாலச்சந்திரன் (பாலன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயே தேடுகின்றோம்.....

என் மகவின் பிறப்பிற்காய்
ஓடோடி விரைந்து வந்தாயே
சந்தோஷம் கொண்டு இன்புற்ற போது
கண்ணிமைக்க முன்னே மறைந்தனையோ
உன்வருகை கண்டு சேயாய் உருக்கினேன்
ஒவ்வொன்றாய்ச் சொல்லிச் சொல்லி
அறிவூட்டிய அன்புத்தாயே தேடுகின்றேன்
உன் உருவம் என்றுமே நிழலாடி நிற்கும்
பாலன் அண்ணனை பார்க்க முன்னமே
பாடையேறி பயணம் சென்றாயே
பூதவுடல் பார்த்தே அழவைத்தாயே
சொந்தங்களைத் தேடியபடியே வாழ்ந்தீர்
சோகத்தால் தவிக்கவிட்ட முறை இதவோ
எம் ஆயுள் உள்ளவரை அம்மா
ஒருபோதும் மறவோம் தாயே
உன் ஆத்மா சாந்தி பெறவே
தெண்டனிட்டே அழுகின்றோம்



மகள்மார்
பாலசாந்தி (சாந்தா)
ராஜவதனி (ராஜி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடிநிற்கின்றோம் மாமி.....

உறவை நினைத்தபடியே
ஓடோடிவந்து உதவிட்ட மாமியே.....
வாடி நிற்கின்றோம் உமைப்பிரிந்தே
யாழ்ப்பாணம் சென்ற செய்தி அறியமுன்னே
பொல்லாத யமன் பறித்த செய்தி அறிந்தோம்
காற்றாடி போல கனன்று சுழன்றோம்
ஓடி வந்து பூதவுடல் காணத் துடித்தோம்
காலம் எமைத் தடுத்துவிட்டதே மாமி
சாந்தி அடைந்த மகிழ்ச்சி உடைந்துபோனதே
உறவுகளை ஒன்றாய்ச் சேர்க்க வைத்தே
மறைந்தோடிய மாயமென்னவோ
அடுக்கடுக்காய் சகோதரர்களை இழந்து
வாழ விரும்பாமல் மாண்டு போனாயோ
காணாத பூதவுடலைத் தேடுகின்றோம்
கடைசி வரை மறக்க முடியாமல்
உன் ஆத்மா சாந்தி பெறவே
மலர் தூவித் துதிக்கின்றோம்

மருமக்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைத்து நினைத்து கலங்குகின்றோம்

நினைத்து நினைத்துக் கலங்குகின்றோம்
உயிர் காணாமல் துடிக்கின்றோம்
பிறந்த காலம் முதல் அன்பு முத்தம் தந்தே
பாசமாய் எமை அணைத்தெடுப்பீர்
ஆசைமுகம் தேடி நாம் எங்கே செல்வோம்
மீண்டுமொரு தடவை பிறக்கமாட்டாயோ
பிஞ்சினிலே கதைகள் சொல்லியே
சோறூட்டி மகிழ்ந்தாயே
வாடிநின்று தேடுகின்றோம் விரைந்து வருவாயோ.

பேரப்பிள்ளைகள்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேற்றம்

தேதேறு மனமே சித்தும் அசத்தும்
-இரண்டதனில்
தேறும்போதே இவ்வுடலும் தெளிவாய் அழியும்
-அசத்தென்றே.
கூறும் பஞ்ச பூதத்தால் கூட்டிய இந்தப்
-பண்டமது
நீறாய் நெருப்பில் அழிவதன்றி நிலைக்கும்
-உயிர்தான் அழிந்திலதே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கூறுகின்றோம்

எமது அன்புத் தெய்வம்

**அமரர் பா. புவனேஸ்வரி**

அவர்கள் மறைந்த போன செய்தி கேட்டு
யாழ்வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும்,
உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இருந்து
தொலைபேசி, தந்தி மூலமாகவும்
அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும்
ஓடிவந்தணைத்து ஆறுதல் செய்து சேர்ந்திருந்து
இறுதிவரை உதவிகள் புரிந்தோர்க்கும்,
மலர்வளையம் வைத்து அஞ்சலி செய்தோர்க்கும்
45ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகளில்
கலந்து கொண்டோர் அனைவருக்கும் மனம்
திறந்து நன்றி கூறுகின்றோம்.


குடும்பத்தார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையதை எதை நீ இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள், அது வேறொருவருடையதாகும்

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org